# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. நண்பன்

1. நல்ல நண்பர்களுடன் பழக வேண்டும்.
2. ஆபத்துக் காலத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.
3. நான் பள்ளிக்கு எனது நண்பனுடன் செல்வேன்.

## 2. குதிரை

1. குதிரை பாலூட்டி வகையைச்சார்ந்த விலங்கு.
2. குதிரை ஏர் உழவும் வண்டி இழுக்கவும் பயன்படும்.
3. குதிரைகள் வேகமாக ஓடும்.

## 3. நட

1. அதிகாலையில் நடப்பது நல்ல பழக்கம்.
2. என் நண்பன் வீட்டிற்கு நடந்து சென்றேன்.
3. பெற்றோரைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

## 4. யானை

1. யானை விலங்குகளில் பெரியது.
2. யானை பாலூட்டி வகையைச்சார்ந்தது.
3. யானையின் ஒலி பிளிறுதல் ஆகும்.

## 5. தலை

1. உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் தலை உண்டு.
2. தலையில் முக்கிய உறுப்பான மூளை உள்ளது.
3. தலையினை மண்டைஓடு பாதுகாக்கின்றது.